தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 4 | சென்னை | 29-3-58 | சனிக்கிழமை | இதழ் 37

திருவாடானைத் தொகுதியில் நடப்பதென்ன ?

இராமனுதபுரம் மாவட்ட- திருவாடானைத் தொகுதியில் வருகின்ற ஏப்ரல் ஐந்தாம் தேதியன்று உபதேர்தல் நடைபெற இருக்கிறது. தி. மு. கழகத்தின் சார்பில் தோழர் இராம. வெள்ளையன் போட்டியிடுகின்ருர். வளமானூர் தோழர் இராமக்கிருஷ்ணன் அவர்கள் காங்கிரஸ் கட்சியின் சார்பிலும், கப்பலூர் தோழர் கரிய மாணிக்கம் அவர்கள் கா. சீ. க.வின் சார்பிலும் போட்டியிடுகிருர்கள். போன பொதுத் தேர்தலில் போட்டியிட்ட ஐந்து அபேட்சகர்களில் இவர்கள் மூவரைத்தவிர மற்றவர்கள் மிகக் குறைந்த வாக்குகளைப் பெற்ருர்கள். படுதோல்வியடைந்தஅந்த இருவரும் காங்கிரஸ் அபேட்சகராக நிற்பதற்கு முயற்சி எடுத்து அது கிடைக்காமற் போகவே அவர்கள் தனித்தனியாகக் காங்கிரஸ் கட்சியை எதிர்த்தார்கள். காங்கிரஸ் கட்சி அவர்கள்மீது நடவடிக்கை எடுத்திருந்தது. ஆனல் இந்த இடைத்தேர்தலில், தமிழ்நாடு காங்கிரஸ் தன்னுடைய சுயநலத்திற்காக, காங்கிரசிற்குத் துரோகம் செய்த அந்த இரண்டு பேர் மீதிலும் எடுத்திருந்த நடவடிக்கைகளை ரத்து செய்துவிட்டு அவர்களுக்கும் 'மாட்டுச்சின்ன'த்தைக் கோர்த்துவிட்டிருக்கிறது. போன தேர்தலில் காங்கிரசை எதிர்த்து அந்த இரண்டு பேருக்கும் வாக்களித்தவர்கள் இப்போது அவர்களை நம்ப மறுக்கிருர்கள். "முன்பு உங்களுக்கு ஓட்டுப் போட்டது, நீங்கள் காங்கிரசை எதிர்க்கிறீர்கள் என்பதற்குத் தானே தவிர உங்களின் தனிப்பட்ட செல்வாக்கிற்காக அல்ல" என்று இப்போது மக்கள் சொல்லுகிருர்கள். திருவாடானைத் தொகுதியில் தி. மு. க.வைத் தவிர மற்ற இரண்டு அபேட்சகரில் எவரும் நேர்மையான பிரச்சாரத்தைச் செய்யவில்லை. காங்கிரஸ் அபேட்சகரை ஆதரித்து பிரதமர் காமராசரிலிருந்து அத்தனை பேரும் வந்து பேசிக்கொண்டிருக்கிருர்கள். ஆளும் கட்சி - அதிகாரத்தைப் பெற்றிருக்கும் கட்சி - அதனுடைய தொண்டுகளைக் காட்டி அந்த வட்டாரத்தில் ஓட்டுக் கேட்க முடியவில்லை. பெரும்பாலான காங்கிரஸ் பிரச்சாரகர்கள் காந்தியைக் காட்டி ஓட்டுக் கேட்கிருர்கள். பிரதமர் காமராசர் தொண்டி நகரில் பேசும்போது காங்கிரஸ் மக்களுக்குச் செய்த சாதனை என்று ஒரு மூட்டை விஷயங்களை அவிழ்த்துவிட்டாராம். அவரது பேச்சு அந்தப் பகுதி காங்கிரஸ்காரர்களிடையேகூட பெருத்த மன வேறுபாட்டை உண்டாக்கி விட்டது என்று சொல்லப்படுகிறது. ஏன் அந்த நிலைமை தெரியுமா ?

"திருவாடானைத் தொகுதி மக்கள் காங்கிரசை நம்பி மோசம் போனவர்கள்; தேசீயப் போராட்டத்திலே முன் நின்று போராடி தியாகத் தழும்புகளை பெற்றது இந்த வட்டாரத்து மக்கள் தான். ஆனல் காங்கிரஸ் கட்சி திருவாடானைத் தொகுதிக்குச் செய்தது என்ன ?"—என்று அந்த வட்டாரத்துக் காங்கிரஸ் கிழவர்கள் கேட்கிருர்கள். இதிலே உண்மை இல்லாமல் இல்லை. காமராசரின் தேர்தல் பேச்சில் துளியும் உண்மை இல்லை தான். காங்கிரஸ் சர்க்கார் எதையும் செய்யும் வல்லமை பெற்றதென்ருல்—எல்லா மக்களும் அதற்கு ஒன்றுதான் என்ருல் திருவாடானைத் தொகுதி சரியான போக்குவரத்து இல்லாமல் தொல்லைப்படுவதேன்? தொண்டி பெரிய நகரமாக இருந்தும், திருவாடானையில் நீதிமன்றங்கள் இருந்தும், அந்தத் தொகுதி முழுதும் மின்சாரம் இல்லாமற் போனதற்குக் காரணம் என்ன? இவ்வளவு நாளாகக் கவனிக்காத காமராசர் இப்போதுமட்டும் கனிந்துரைப்பது எதற்காக?-அந்த வட்டாரத்து மக்கள் இந்த ஏமாற்று வித்தைகளை நன்குணர்ந்துவிட்டார்கள். மேலும் அந்தத் தொகுதியில் இன்ஞெரு அருவெறுக்கத்தக்க பிரச்சாரம் ஒன்று நடைபெறுகிறது.

"நாங்கள்தான் ஜாதியை ஒழித்தோம்" என்று மேடையில் பேசிவிட்டு ஓட்டுக் கேட்டும் கிராமங்களுக்குச் சென்று முதுகுளத்தூர் பிரச்சினையை அவிழ்த்துவிட்டு மிருக உணர்ச்சியை வளர்த்து வருகிருர்கள். ஆதித்திராவிடர்களிடம் சென்று நாங்கள்தான் முதுகுளத்தூர் கலவரத்தில் ஆதித்திராவிடர்களைக் காப்பாற்றிஞேம் என்கிருர்கள். 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்று கெஞ்சிக்கூத்தாடும் காமராசர் இதை அனுமதிப்பது அவர் தேசநலத்தைக் காட்டிலும் கட்சியையே பெரிதாகக் கருதுவதை மெய்ப்பித்துக் காட்டுகிறது. இன்னும் வெளிப்படையாகச் சொன்ஞல், காங்கிரஸ் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டிருக்கும் தேர்தல் கமிஷன் காரியாலயத்திலிருந்து வெளியிடப்படும் எல்லாப் பிரசுரங்களிலும் இன்னும் ஜாதிப் பட்டங்கள் நீக்கப்படவில்லை. காங்கிரஸ் அபேட்சகருக்குப் பக்கத்தில் 'தேவர்' என்றும், கா. சீ. க. அபேட்சகருக்குப் பக்கத்தில் **'அம்பலம்'** என்றும் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. சர்க்கார் ஜாதியை வளர்க்கிறது என்பதற்குஇது சரியான எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

காங்கிரஸ்தான் இப்படி என்ருல் கா. சீ. க.வினர் இதற்குக் கொஞ்சமும் தாழ்ந்தவர்களாக நடந்து கொள்ளவில்லை. மான 'மறவர்களே முதுகுளத்தூர் துப்பாக்கிப்பிரயோகம் நினைவிருக்கட்டும் ?" என்கிருர்கள்.

இப்போதுதான் திருவாடானைத் தொகுதியில் தி. மு. கழகத்தின் உண்மையான ஒளி மின்னலிடுகிறது. ஜாதிப் பிரச்சினையைப்பற்றிப் பேசாமல், பிற கட்சிகளைத் திட்டாமல் தனது சொந்தக் கொள்கைகளை எடுத்தியம்பி வருவது அந்தத் தொகுதியில் தி. மு. கழகம் ஒன்றுதான் என்பதை மக்கள் உணரத்தொடங்கி விட்டனர். அவைகளில் சில:—

திருவாடானைத் தொகுதியில் காங்கிரஸ் வெற்றி பெற்ருல்— அதனுல் காங்கிரசுக்குப் புது பலம் ஒன்று கிடைக்கப் போவதில்லை. மக்களுக்கு இப்போது செய்யத்தவறிய காங்கிரஸ் திருவாடானைத் தொகுதியிலே வெற்றி பெற்ருல்மட்டும் செய்யப் போவதில்லை. காங்கிரஸ் எவ்வளவுதான் வெற்றி பெற்ருலும் அது வடநாட்டுக்கு 'ஏஜண்டாக' இருக்கும் கட்சிதான். தமிழர்களைக் காட்டிலும், காமராசருக்கு வடநாட்டுக்காரர்கள்தான் மிகவும் வேண்டியவர்கள்.

— 3-ம் பக்கம் —

மூதுரை விளக்கம்

முருக சுப்பிரமணியன்

மயில் எங்கே! வான்கோழி எங்கே!

கண்ணிலும் கையிலும் வளையும் உடலிலும் ஆயிரமாயிரம் எண்ணங்களைப் படம் பிடித்துக் காட்டுவது ஆடற்கலை. மனிதன் பேச்சுக் கலையை அறியாமுன்பு கையடையாளங்களால் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டான். பேச்சுக்கலை வளர்ந்து அதன் தொடர்பாக உலகில் பல நூறு மொழிகள், மக்களின் கருத்தை வெளியிடும் கருவிகளாக மலர்ந்த பின்னரும், கை முத்திரைகளால், முகக் குறிப்பால், உடலின் அசைவால் உள்ளக் குறிப்பை வெளியிடும் ஆடற் கலை வியக்கத் தக்க விதத்தில் வளர்ந்தோங்கி வருகிறது.

அகத்தின் அழகை முகம் காட்டுவதுபோலக் கேவலம் சொற்களால் காட்டமுடியுமா? உள்ளத்தில் ஒன்று, உதட்டில் ஒன்று என்பார்கள். அதனுல் உள்ளக் குறிப்பைச் சமயங்களில் மறைத்துவிடும் ஆற்றலே சொல்லுக்குண்டு. ஆனுல் முகம் உள்ளக் குறிப்பை, இயற்கையாக மாற்ருமல் மறைக்காமல் காட்டும் ஆற்றல் படைத்தது. அதனை உணர்ந்தே மனிதன் ஆடற்கலையை வளர்த்தான்.

இன்று நடனம் கவர்ச்சிமிக்க கலை. நடனக் கலையில் ஈடுபட்டிருப்போருக்குக் கொள்ளை கொள்ளையாக வருமானம் கிடைக்கிறது. பெரும் புகழ் படைத்த நடனக்காரிகளுக்கும் நடனக்காரர்களுக்கும் பணத்தோடு மலைபோலப் புகழும் குவிகிறது. அரசியல் தலைவர்களுக்கு அளிக்கப்படும் வரவேற்பும் மரியாதையும் ஆடற் கலைஞர்களுக்கும் நல்கப்படுகின்றன.

ஆடற்கலைக்கு இன்னொரு சிறப்பும் உண்டு. அது மொழியின் எல்லைக்கு உட்பட்டதன்று. மலை நாட்டு ஆடற்கலையை அமெரிக்காவிலும் ரஷ்யாவிலும் இருப்பவர்கள் கூடச் சுவைக்கமுடியும்.

அடங்காத ஆர்வம்

மலைநாட்டில் தமிழ்க் குழந்தைகளிடையே நாட்டியம் பயில்வதில் அடங்காத ஆர்வம் காணப்படுகிறது. எந்தப் பொது நிகழ்ச்சியும் நாட்டியம் இல்லாமல் இருப்பதில்லை. நம் சின்னச்சிறு செல்வங்கள் மேடையேறி ஆடி நம் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிடுகிருர்கள். ஏன் உங்களிடையேகூட ஆடத் தெரிந்த தங்கையர் எத்தனையோ பேர் இருக்கக்கூடும்.

ஆகவே, நீங்கள் நடனங்களைக் கண்டிருக்கிறீர்கள்; உங்களிலே சிலரால் நடனமாடவும் முடியும். சரி மயிலின் நடனத்தை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? இதுவரை காணுதிருந்தாலும் உங்கள் ஆசிரியரையோ, தாய் தந்தையரையோ அழைத்துப் போகச் செய்து மயிலை நீங்கள் கண்டிப்பாகக் காண வேண்டும். மயில், காண வேண்டிய அழகான பறவை. நம் நாட்டு கோவில்களில் மயில்களை நிறைய வளர்க்கிருர்கள். விலங்குக் காட்சி சாலைகளிலும் மயில்களைக் காண முடியும்.

மயில் என்றவுடனேயே அதன் ஆட்டந்தான் நம் நினைவுக்கு வரும். மயிலைப் பார்த்தே மனிதன் ஆடக் கற்றுக்கொண்டான் என்ருல்கூட மிகையாகாது. குயில் இசையரசி. மயில் ஆடலரசி.

மயில் கற்பனைக் களஞ்சியம். வானத்தில் கருமுகிலைக் கண்டால் தோகை விரித்தாடும் மயில். மழையின் வரவு குறித்து அதற்கு அவ்வளவு மகிழ்ச்சி. அந்த மகிழ்ச்சிப் பெருக்கிலே மயில் பெண்ணுள் ஆடுகிருள். அந்த ஆட்டத்தில் திளைத்துக் கவிஞர் பாரதிதாசன் வடித்திருக்கும் பாட்டு அருமையான சித்திரம்:

அழகிய மயிலே!
அழகிய மயிலே!
அஞ்சுகம் கொஞ்ச
அமுத கீதம்
கருங்குயில் இருந்து
விருந்து செய்யக்
கடிமலர் வண்டு
நெடிது பாடத்
தென்றல் உலவச்
சிலிர்க்கும் சோலையில்
அடியெடுத் தூன்றி
அங்கம் புளகித்து
ஆடுகின்ருய் அழகிய மயிலே!

★

உனது தோகை
புனையாச் சித்திரம்!
ஒளிசேர் நவமணிக்
களஞ்சியம் அதுவாம்

★

உள்ளக் களிப்பின்
ஒளியின் கற்றை
உச்சியில் கொண்டையாய்
உயர்ந்ததோ என்னவோ

★

ஆயிரம் ஆயிரம்,
அம்பொற் காசுகள்
ஆயிரம் ஆயிரம்
அம்பிறை நிலவுகள்
மரகத உருக்கின்
வண்ணத் தடாகம்
ஆன உன் மெல்லுடல் ஆடல்,
உள் உயிர்,
இவைகள் என்னை
எடுத்துப் போயின!

மயிலின் பசுந்தோகை புனையாச் சித்திரம்! அது மரகதத்தை உருக்கி வார்த்த தடாகம் என்கிருர் பாரதிதாசன். இதற்குமேல் மயிலை நாம் எப்படி வர்ணிக்கமுடியும்?

★

ஔவைப் பாட்டியும் மயிலின் நடனத்தில் திளைத்தார். 'திருஷ்டி பரிகாரம்போல' வான்கோழியின் நடனத்தையும் அவர் காண நேர்ந்தது. ஔவையாரின் கவிதை உள்ளம் இரண்டு நடனங்களையும் எடை போட்டது. அதன் விளைவாக நமக்கு முத்துப்போல ஒரு மூதுரைப் பாட்டு கிடைத்திருக்கிறது.

உவமையின் சிகரம்

ஔவையார் உவமைகளை எடுத்தாள்வதில் வல்லவர். கச்சிதமான உவமைகள். உடனே கருத்தை விளங்க வைக்கும் உவமைகள். யாருக்கும் எளிதில் புரியும் உவமைகள். இந்த உவமை நயம் ஔவையாரின் மூதுரைக்குத் தனிச் சிறப்பு.

இன்று நாம் தெரிந்துகொள்ளவிருக்கும் மூதுரைப்பாட்டு உவமையின் சிகரமென்றே சொல்லலாம்.

கான மயிலாடக் கண்டிருந்த
வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத்
—தானுந்தன்
பொல்லாச் சிறகை
விரித்தாடினுற் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

மயிலின் ஆட்டத்தைப்பற்றிச் சொல்லிவிட்டோம். வான்கோழியின் ஆட்டம் எப்படி? வான்கோழி இறைச்சி மிகச் சுவையாக இருக்குமென்று புலால் உண்போர் சொல்லுவர். வான்கோழியின் சிறப்பெல்லாம் அதுதான். உண்ணத்தான் வான்கோழி இனிக்கும்போலும்! அது தவிர வான்கோழி காண்பதற்கே சகிக்காது; அதன் கொண்டையும் அதன் தாடையும்! அப்பப்பா! இந்த அழகில் அது தோகை விரித்தாடத் தொடங்கிவிட்டால் கண்களை இறுக்கமாக மூடிக்கொள்ள வேண்டியதுதான். மயிலின் அழகு நடனத்தையும் வான்கோழியின் அவலட்சண ஆட்டத்தையும் ஒப்பிட்டுப் பேசுகிருர் ஔவையார்.

காட்டில் மயில் ஆடிக்கொண்டிருந்தது. அதனைக் கண்டது வான்கோழி. உடனே அதற்குப் பலமான யோசனை. 'மயிலுக்கு மட்டும்தானு ஆண்டவன் தோகையைத் தந்திருக்கிருர்? நமக்கும்தானே கொடுத்திருக்கிருர்' என்று அது எண்ணிக்கொண்டது. 'மயிலுக்கு நாம் எவ்வகையில் குறைவு?' என்று தன் தோகையை விரித்து ஒருகணம் சிந்தித்தது. 'தானும் ஒரு மயில்தான்' என்று எண்ணிவிட்டது அந்தப் பேதை வான்கோழி! உடனே அது தோகையை விரித்தது! போட்டது ஆட்டம்! கண்ணுள்ளவர்கள் யாரும் பார்க்கமுடியாது. அவ்வளவு அலங்கோல ஆட்டம் அது. ஆடற்கலை என்ரு சொல்வது அதனை? கொலை! கொலை! கொலை!

ஔவையாருக்கு ஒரே ஆத்திரம். ஆடும் மயிலையும் அலங்கோல ஆட்டம் போடும் வான்கோழியையும் அருகருகே பார்த்தால் யாருக்குத்தான் ஆத்திரம் பிறக்காது?

★

மயிலும் வான்கோழியும் காட்டில் மட்டும் இல்லை; நாட்டிலும் இருக்கின்றன. பறவைகளாக மட்டும் இல்லை; மனித உருவத்திலும் நடமாடுகின்றன.

கற்றவர் அவையிலே நீட்டிய ஓலையைப் படிக்கமுடியாமல் திருதிருவென்று விழித்துக்கொண்டு நிற்பவனை 'நல்ல நெடுமரம்' என்று சொன்ன ஔவையார் இங்கே அரைகுறைப் படிப்பாளிகளை அருமையாகக் கேலி செய்கிருர்.

எழுத்து வாசனையே இல்லாத மூடன் மனிதப் பிறவி எடுத்த மரம். காட்டிலுள்ளவை மரங்கள் அல்ல, அந்த மூடனே நல்ல மரமென்று கூறிய ஔவைப் பாட்டி,

— 7ம் பக்கம் —



நீலகிரி, கொல்லைக்கோம்பை நகர தி. மு. கழக முன்னுள் செயலாளரும், ரயில்நிறுத்தப் போராட்டத்தில் பங்கு கொண்டு சிறை சென்றவரும், தமிழ்நாடு லாரி டிரான்ஸ்போர்ட் உரிமையாளருமான **திரு. கு. இராமக்குட்டி** அவர்களுக்கும் **திருமதி செல்லம்** அவர்களுக்கும் சென்ற மாதம் 26-2-'58ல் கொல்லைக் கோம்பையில், வாசன் டிரான்ஸ்போர்ட்ஸ் உரிமையாளர் திரு. சீனு அவர்கள் தலைமையில், திருமணம் சிறப்பாக நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தி திருவாளர்கள்

டி. கே. சீனிவாசன்
நாஞ்சில் கி. மனேகரன், எம். ஏ.
உடுமலை நாராயணன்
மேட்டுப்பாளையம் சண்முகநாதன், பி. ஏ.
பல்லடம் பொன்னுசாமி

ஆகியோர் பேசினர். மணமக்களுக்கு ஏராளமான பரிசுகளும், டாக்டர் யூ. கிருஷ்ணுராவ் முதலான பல அரசியல் பிரமுகர்களிடமிருந்தும், எம். ஜி. ராமச்சந்திரன், இன்னும் பல இயக்கப் பிரமுகர்களிடமிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வந்து குவிந்தன!

வாழ்க மணமக்கள்!

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 4 ‖ 29—3—58 ‖ இதழ் 37

ரா. பி. சே. பேசுகிறார்!

திராவிடம் வெகு விரைவில் தனது உரிமையைப் பெறப்போகிறது என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. டில்லி அரசு தமிழருக்கு இழைத்து வரும் கொடுமைகளை-ஓரவஞ்சகச் செயல்களை தி. மு. கழகத்திற்கு அப்பாற்பட்டவர்களும் புரிந்துகொள்ளத் தலைப்பட்டுவிட்டார்கள். டில்லி சர்க்காரால் புறக்கணிக்கப்பட்ட தமிழகத்து அரசியல் அறிஞர்களும், வணிகத்துறையில் தலைசிறந்த வணிகர்களும், மொழித்துறையில் திராவிடத்துப் பேரறிஞர்களும் நன்கு புரிந்துகொள்ளும் காலம் வந்துவிட்டது. அணிமையில் தமிழறிஞர் பேராசிரியர் **ரா. பி. சேதுப்பிள்ளை** அவர்களின் தெளிந்த தமிழறிவு - தாய்மொழி ஆராய்ச்சி டில்லியிலுள்ளவர்களால் உதாசீனம் செய்யப்பட்டிருக்கிறது. பேராசிரியர் அவர்களே இதை மனம் வெதும்பி வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

"அரசியல் திட்டத்தை 14 மொழிகளிலும் மொழிபெயர்ப்பதற்கும், சில பதங்களுக்கு ஏற்ற சொற்களை எந்த மொழியில் இருந்தாலும் எடுத்துக் கொள்வதற்கும் டில்லியில் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. தமிழ்மொழியின் சார்பாக நான் சென்றேன். அங்கே டேக்ஸ் (Tax) அஸ்ஸெஸ்மெண்ட் (Assessment), டியூடி (Duty), கஸ்டம்ஸ் (Customs) என்ற ஆங்கிலச் சொற்களுக்கு ஏற்ற இந்தி மொழிச் சொற்கள் தேவைப்பட்டன. இந்தி மொழிக்காரர்களைப் பார்த்து இவற்றிற்கேற்ற சொற்களைச் கூறும்படி தலைவர் கேட்டார். அவர்கள் இந்த நான்கு சொற்களுக்கும் 'சூர்க்கா' என்ற ஒரே சொல்லைத் திரும்பத் திரும்பச் சொன்னார்கள்.

"இதைத் தலைவர் விரும்பவில்லை. இந்தி மொழி எனக்குத் தெரியாது; தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆசையும் கிடையாது; இந்தியில் ஏற்ற சொற்கள் இல்லை என்று அவர் கூறியபோது என் மனம் விரிந்தது. இறுதியில் தலைவர் தென் திசையைப் பார்த்தார், திராவிடத்தை நோக்கினார். (திராவிட மொழியின் சார்பாக வந்திருந்தவர்களை). "இவைகளுக்கு ஏற்ற சொற்கள் தமிழ் மொழியில் இருக்கின்றன. ஆனால் நீங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டீர்கள்; இருப்பினும் கூறுகிறேன்" என்று சொல்லி, "டெக்ஸ்—வரி; டியூடி-கடமை; கஸ்டம்ஸ்-சுங்கம்; அஸ்ஸெஸ்மெண்ட்-தீர்வை" என்று கூறினேன்;

"ஆனால் அவர்கள் இதை ஏற்றுக்கொள்ளாமல் இன்னும் இந்தச் சொற்களுக்கு "சூர்க்கா" போட்டபடியேதான் இருந்து வருகிறார்கள். இவர்களா இந்தியாவை ஆளப் போகிறார்கள்? தென்னாட்டு மொழிச் சொற்களை ஏற்றுக் கொள்ளக்கூடிய செவியினர் அங்கு இல்லை. தென்னாடு என்றால் புறக்கணிக்க வேண்டும் என்ற எண்ணம் மட்டும் இருக்கிறது. இவைபோன்ற பல சொற்களுக்கு இந்திச் சொற்கள் கிடையா. ஆனால் ஏற்ற தமிழ்ச் சொற்களை நான் கூறியும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. வடநாட்டவர் இங்கே வரும்போது இந்தியா ஒரே நாடு என்று கூறுவதை நாம் ஏன் ஏற்றுக் கொள்ள வேண்டும்?"

உண்மை நிலையை இவ்வாறு துணிந்துரைத்த பேராசிரியர் அவர்களின் கூற்றை மற்ற தமிழ்ப் புலவர்கள் கூர்ந்து கவனிக்கவேண்டும். எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் ரா. பி. சே. அவர்களுக்கும் தி. மு. க. வுக்கும் தொடர்பு கிடையாது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்'-என்ற தமிழரின் குரலை ஒலித்து எவர் மனதையும் புண்படுத்தாது தொண்டாற்றி வரும் பேராசிரியர் அவர்கள் 'டில்லி'யின் அனுபவத்தைக் கூறும்போது அவரது குரலிலே தமிழ் உணர்ச்சி-திராவிடத்தின் எழுச்சி பொங்கி வழிவதைக் காணுகிறோம். இந்தியா ஒரு நாடு அல்ல என்ற பூமி நூல் தத்துவத்தை டில்லிக்கு உணர்த்துவோம் என்று அவர் சிங்கமுழக்கமிடுகிறார். அந்த முழக்கத்தின் ஒலியைப் பெருக்கி டில்லி செங்கோட்டையில் மோதிட செய்து திராவிடத்தைப் பிரிப்பதே தி. மு. கழகத்தின் குறிக்கோள். பேராசிரியரின் போர்க்குரல் கழகத்தின் இலட்சியத்திற்கு வலிவு தருவதாக அமைந்திருக்கிறது. இதுகாறும் அவர் தமிழுக்கு ஆற்றிய தொண்டு திராவிடத்தைப் பிரிக்கும் பணியிலே தான் பூரணத்துவம் பெற இருக்கிறது என்பதை தமிழகம் உணரும் காலம் வெகு தூரத்திலில்லை.

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

கா. சீ. கட்சிக்குத் திட்டம் இல்லை. அமைப்பு முறை கிடையாது. தமிழர்களின் உரிமையைக் காக்கும் வகையில் அவர்களது கட்சி அமைப்பில் ஒரு வரி கூடக் காணப்படவில்லை. தமிழ்நாட்டுக் கட்சி என்று வெளிப்படையாகக் கூறிக்கொள்ள எந்தக் கொள்கையும் கா. சீ. க வில் இல்லை. வடநாட்டிலுள்ள காங்கிரஸ் எதிரிகள் இவர்களை மதிக்காவிட்டாலும், இவர்கள் வடநாட்டுக்காரர்களை எதிர்பார்த்திருக்கிறார்கள். கா. சீ. க. ஒரு உருப்படியான கொள்கையை நோக்கிப் பிரயாணம் செய்கிறது என்பதற்கு சான்றுகள் காட்ட முடியாது.

★ தி. மு. கழகம் தாய்நாட்டுக் கட்சி. தமிழகத்து நாகரீகத்தை-பண்பாட்டை-மொழியைப் பாதுகாக்கக்கூடிய கட்சி. தமிழகம் செழிப்புறுவதற்கு காங்கிரஸ்காரர்கள் சொல்லாத காரணத்தை-கா. சீ. க. வினர் காட்டாத வழியை தி. மு. க. சொல்லுகிறது. திராவிடம் தனியரசு பெற வேண்டும் என்கிறது.

—இந்த உண்மைகளை திருவாடானைத் தொகுதி வாக்காளர்கள் புரிந்துகொண்டிருப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. வாக்காளர்களை நேரில் சந்திக்கும்போதும் பொதுக்கூட்டங்களில் காணும்போது அவர்களது நடவடிக்கைகளில் உணர்ச்சியும், உற்சாகமும் காணப்படுகின்றன.

திருவாடானைத் தொகுதியிலுள்ள அரசியல் அறிவு படைத்தவர்கள் தி.மு.க.வின் எதிர்காலத்தைப்பற்றிய ஒரு பேருண்மையைப் புரிந்து கொண்டுவிட்டார்கள். ஒரு கட்சி பலம்பெற வேண்டுமானால்-சேகரிக்கப்பட்ட பலம் காங்கிரசைப்போல் சிதறாமல், கம்யூனிஸ்ட் கட்சியைப் போல் கரையாமல், சோஷலிஸ்ட் இயக்கத்தைப்போல் சோர்ந்து போகாமல் இருக்கவேண்டுமானால் தலைவர்களுக்கும் தொண்டர்களுக்கும் இடையிலே எந்தச் சக்தியும் புகுந்து பிரித்துவிட முடியாத கலாச்சார ஒற்றுமை இருக்க வேண்டும். அத்தகைய ஒருமைப்பாடு தி. மு. கழகத்தில்தான் இருக்கிறது என்பதைக் காலம் வெளிக் காட்டிவிட்டது. திருவாடானைத் தொகுதி வாக்காளர்கள் விரும்பும் நாகரீகம் தான் தி. மு. க. அபேட்சகரான தோழர். இராம. வெள்ளையன் பின்பற்றும் நாகரீகம். அவர்கள் பாதுகாக்க விரும்பும் தமிழ் மொழிதான் வெள்ளையன் பேசும் மொழி. காங்கிரசுக்கு இந்தப் பாச உணர்ச்சி இல்லை. கா. சீ. க.வுக்கு இந்த மன ஒற்றுமை இல்லை.

இளம் வயதில் செட்டி நாட்டுப் பகுதியில் அரும் பணியாற்றி, மற்ற கட்சிக்காரர்கள் மிரளும் வகையில் மிகப் பெரிய மாநாடு ஒன்றை நடத்திக் காட்டி அந்தப் பகுதி மக்களிடையே நல்லதொரு இடத்தைப் பெற்றிருக்கும் இராம. வெள்ளையன் அவர்கள் வெற்றி பெறுவதையே நாட்டிற்கு நலம் கோருவோர் விரும்புகிறார்கள்.

கா. அப்பாதுரையார்

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் அவர்கள் உடல்நலக் குறைவு ஏற்பட்டு மருத்துவச் சிகிச்சையிலிருந்து வருவதால், இன்னும் ஓர் திங்களுக்கு ஓய்வெடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது; எனவே, உடல்நிலை சீர்படும்வரை எந்தப் பொது நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ள இயலாதிருப்பதாகத் திருமதி **அலமேலு - அப்பாதுரையார்** அறிவிக்கிறார்.

தி. மு. கழகத்தின் சார்பில், சென்ற வாரம் கண்ணதாசன், அருப்புக்கோட்டை எம். எஸ். இராமசாமி, நடிகமணி டி. வி. நாராயணசாமி, நாஞ்சில் மனோகரன், என். எஸ். இளங்கோ ஆகியோர் சென்று கழகத்தின் கொள்கைகளை வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். இம்மாதம் முப்பதாம் தேதியன்று அறிஞர் அண்ணா அவர்கள் போகிறார்கள், ஏப்ரல் 2; 3, தேதிகளில் கலைஞர் கருணாநிதி அந்தத் தொகுதிக்குப் போய் பேச இருக்கிறார். திருவாடானைத் தொகுதிபற்றி யார், எந்தக் கோணத்திலிருந்து ஆராய்ந்து என்ன முடிவு கூறினாலும், தேர்தல் முடிவு, ஆண்டுக்காண்டு கழகம் வளர்ந்து வருகிறது என்ற நல்ல தீர்ப்பைத் தர ஒருபோதும் தவறாது என்பது திண்ணம்.

— **தென்னரசு.**

திருமணம்

நண்பு நலம் பழுநிய அன்புடையீர்!

நிகழ்வுறும் வள்ளுவராண்டு 1989, பங்குனித் திங்கள் பதினேழாம் நாள் (30-3-58) ஞாயிறு காலை 9-மணியளவில் எனது இல்லில்

அருமைப் பெருந்தகை **அறிஞர் அண்ணா**, M.A., M.L.A. அவர்களின் சீரிய தலைமையின் கீழ் எனது மகள் செல்வி **தென்றலை** சேரங்குளம் திருவாளர் சுவாமிநாதர் அவர்கள் மகன் செல்வன் **துரைமாணிக்கத்திற்கு** வாழ்க்கைத் துணை நலமாக்கும் மணவணி கண்டு வழி செழித்திலங்க வாழ்த்துரை வழங்குவீர்.

அன்பன்,
ப. நாராயணசாமி

மன்னார்குடி,
மாசி 25.

பாரிஸ் அழகிகள்

கவர்ச்சிமிகுந்த பாரிஸ் யுவதிகளின் இயற்கை அழகை பலவித படுக்கையறைத் தோற்றத்தில் காணவல்ல 36 அசல் போட்டோ படங்கள் ரூ. 10. 24 படங்கள் ரூ. 7. முன் பணம் அனுப்புக. தபாற்செலவு இலவசம். சாம்பிள்கள் கிடையாது

வீனஸ் டிரேடிங் கம்பெனி (தெ.)
தபால் பெட்டி 1693. சென்னை-1.

வெளிவந்து விட்டது!

தென்றல் வெண்பா
1000

விலை ரூபாய் 2-50.

விபரங்கட்கு:
மலர் நிலையம், *133, பிராட்வே, சென்னை-1.*

குஞ்சரத்தின் கதை

எஸ்.எஸ்.தென்னரசு

6

மான்கொம்புக்கு அருகில் சென்று பார்த்தார். மார்பிலே அதே புலி மச்சம் இருந்தது. "அப்படியானல் சிங்கப்பெருமாளின் கிணற்றடியில் கொலையுண்டு கிடந்தது மான்கொம்பு இல்லையா? என்று பொன்னழகர் தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டார். அப்போது மான்கொம்பு புரண்டு படுத்தான். பொன்னழகர் பேச ஆரம்பித்தார்.

"மான்கொம்பு, என்னப்பா சித்திர புத்திரன் ஏமாந்துவிட்டானு? ஊர் உலகமெல்லாம் நீ செத்துப்போய் விட்டதாகவே பேசிக்கொள்கிருர்களே!"

"மான்கொம்பு செத்துப் போய் விட்டால் உலகத்திலே நீதியேது கடவுளேது? பிறராலே கொடுமைப் பட்டவர்கள் உயிர் எளிதிலே போவதில்லை. கண்ணிருக்கும் கஷ்டத்திற்கும் காரணமாயிருந்தவர்களை ஆட்டிப்படைக்காமல், அலக்கழிக்காமல் அந்த உயிர் போனதாக இந்தத் தெற்குச் சீமையிலே கதைகள்கூட இல்லை. உங்களைப்போன்ற பணக்காரர்கள் தயவுமட்டும் கிடைத்தால் சிங்கப்பெருமாளைக் கண்ணீர் வடிக்க வைக்காமல் நான் சாகமாட்டேன். இது கள்ளன் சபதம்" என்று குமுறினன் மான்கொம்பு. அந்தக் குமுறலில் அவனுடைய மகள் பட்ட துயரம் வெடித்துச் சிதறியது.

"மான்கொம்பு, உன் கையைப் பலப்படுத்த எனக்கு மிகுந்த ஆவல். ஆனல் நீ கொலை செய்யப்பட்டாய் என்றதும் என் உள்ளம் கரைந்து ஓடுவதுபோலிருந்தது. இன்று உன்னைப் பார்க்கிறேன். உன் உருவம், சிங்கப் பெருமாளின் கல்லறையின்மீது நின்று கர்ஜிப்பதுபோலவே எனக்குத் தோன்றுகிறது! இந்த மனக்கண் காட்சியை நிகழ்ச்சியாக்கிக் காட்ட என்னலானதைச் செய்கிறேன். என்ன வேண்டும் உனக்கு? பணம் வேண்டுமா? ஆட்கள் தேவையா? எதை வேண்டுமானலும் கேள்!"– அடுக்கிக்கொண்டே போனர் ஜமீன்தார்.

"ஜமீன்தார்; சதித்திட்டம்தான் முதலில். அதற்குப் படைவேண்டும். நம்பிக்கையுள்ளவர்களாக நாலு பேர் இருந்தால் போதும். மான்கொம்பு சாகவில்லை என்ற ரகசியத்தை முதலில் அவர்கள் காப்பாற்றவேண்டும். இரண்டாவது குஞ்சரத்தை அவர்கள் எதிரியாகவே கருதும் மனநிலை பெறவேண்டும். ஏனென்ருல் அவள் அழகி! எவரும் அவள் எதிரே கோபப்படமுடியாது!"

"மான்கொம்பு குஞ்சரம் எங்கே இருக்கிருள்?"

"அவளா? அவள் போன கதையும், நான் இறந்த கதையும் விரிவானது, மிகவும் சுவையானது. அந்தக் காலத்திலே பாட்டிகள் எத்தனையோ கதைகள் சொல்லியிருக்கிருர்கள். அந்தக் கதைகளெல்லாம் நமது கதையிடம் எந்த மூலைக்கு ஜமீன்தார்? நரி பரியாகியிருக்கிறது; கிளி பூனையாகி இருக்கிறது. செத்தவன் பிழைத்ததுண்டா? நான் பிழைத்திருக்கிறேன்"–என்று விளையாட்டாகப் பேச ஆரம்பித்தான் மான்கொம்பு.

ஜமீன்தார் கதை கேட்கத் தன்னைத் தயார்படுத்திக்கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"குஞ்சரத்தைத் தெரியுமா உங்களுக்கு?"

"பார்த்திருக்கிறேன், ஒருமுறை!"

"நீங்களாவது பார்த்திருக்கிறீர்கள்; எனக்கு இன்னும் அந்த வாய்ப்புக்கூடக் கிடைக்கவில்லை. செருப்பாகத்தானே அவருக்கு உழைத்தேன். ஒரு விருந்து, ஒரு வேடிக்கை! பலமிருந்தும், உறவு இருந்தும் அடிமையாக இருந்து கெட்டவன் ஜமீன்தார் நான். இப்போதுதான் திமிறி எழுந்திருக்க முடிந்தது.

"அதைரியப்படாதே மான்கொம்பு; நான் இருக்கிறேன் நடந்ததை விபரமாகச் சொல்லு!"

மான்கொம்பு நடந்ததைச் சொல்லுமுன் நான்கு பக்கங்களிலும் நன்ருகப் பார்த்துக் கொண்டான். எழுந்து வந்து தளத்திலிருந்து ஒரு முறை கீழே பார்த்தான். மல்லிகைப் பந்தல் பூத்து நின்றது. நேரமோ குளிர்ந்த நேரம், மலர் மணமோ அதைக் காட்டிலும் குளிர்ந்திருந்தது. மான்கொம்புக்கு எண்ணங்கள் எங்கெங்கோ போய்விட்டன. மலர் வாடை, மணமானவர்களுக்கு மனைவியை நினைவூட்டுகிறது. வாலிபர்களுக்கு காதலிகளின் நினைவு வருகிறது. பாவம், மான்கொம்பு நெடுநாட்களுக்கு முன்பே மனைவியை இழந்தவன். அவனுக்கு உயிரெல்லாம் தூக்கிட்டுக் கொண்ட பூவாத்தாள்மீதுதான். மல்லிகைப் பந்தலைப் பார்த்தான்; மாடியில் நின்றபடியே சூரைக்குடியிருந்த திக்கை நோக்கினன். பூவாத்தாளைப் புதைத்த மயானம் அவன் நெஞ்சைக் குடைந்தது. "டேய் சிங்கப்பெருமாள், என் மகளுக்குக் கிடைக்கவொட்டாமல் செய்த இந்தப் பூவை ஒருபோதும் உன் மகளைச் சூட விடமாட்டேன். ஞாபகமிருக்கட்டும்" என்று தன்னையும் அறியாமல் பல்லைக் கடித்துக் கொண்டு முணங்கினன் மான்கொம்பு.

எழுந்து போனவனைக் காணவில்லையே என்று எண்ணிய பொன்னழகர் ஒரு குரல் கொடுத்தார்.

கனவு கண்டு விழித்தவனைப்போல் திடுக்கிட்டுத் திரும்பி படுக்கைக்குப் போனன். வெற்றிலையைப் போட்டுக் கொண்டான்.

தெருவிலே புதுக்கோட்டைக்குப் போகும் பாரவண்டிகள் போய்க் கொண்டிருந்தன. தென்னைமரங்களில் கட்டப்பட்டிருந்த முட்டிகளில் மதுத்துளிகள் டுப் டுப் என்று விழுந்து கொண்டிருந்தன. புதுமணத் தம்பதிகளுக்கு விருப்பமான அமைதியான நேரம். மான்கொம்பு அன்று நடந்த சம்பவத்தைக் கூறினன்:

"ஜமீன்தார் எனக்கு ஒரே ஒரு மகள். அவள் எனக்குச் செல்ல மகள். பூவாத்தாள் அவள் பெயர். ஐந்து வயதில் அவள் தாயை இழந்தாள். பூவாத்தாளை நான் கண்ணைப்போல் பாதுகாத்து வந்தேன். பூவாத்தாள் ஓய்வு நேரத்தில் அம்பலகாரர் வீட்டுக்குப் போவாள் குஞ்சரத்தோடு பேசுவாள், இருவரும் சொட்டாங்காய் ஆடுவார்கள். இருவரும் இணைபிரியாமல் இருந்தார்கள். குஞ்சரத்தை அழகி என்பார்கள்; தங்க மகள் பொன்னெளியாள் என்றுகூட வர்ணிப்பார்கள். இவ்வளவுக்கும் நான் அம்பலகாரரின் வலது கை என்ற பட்டப் பெயரைப் பெற்றவன், ஒரு நாள்கூட குஞ்சரத்தைப் பார்த்ததில்லை. குஞ்சரம் சிறு பெண்ணுக இருந்தபோது ஒரு முறை அம்பலகாரர் அந்தப் பெண்ணை கொன்னையூர் திருவிழாவிற்குக் கூட்டி வந்தார். நான் அப்போது பார்த்ததுதான். அதன் பிறகு குஞ்சரத்தை நான் பார்த்ததே இல்லை. "அக்காள் நல்லவர்க்ள்; அன்புள்ளவர்கள்; என்று குஞ்சரத்தைப்பற்றி பலமுறை பூவாத்தாள் சொல்ல இந்தச் செவிகள் கேட்டு மகிழ்ந்திருக்கின்றன. ஒருவருடைய நல்ல இருதயத்தைப் பற்றி மற்ருெருவர் கூறும்போது சொல்லுகிறவர்களின் இதயம் தூய்மையானதாக இருந்தால்தான் அவர்களின் முகத்திலே குளுமையைக் காண முடிகிறது. ஆனல் அகத்திற்கும் முகத்திற்கும் தொடர்பில்லாமல் வார்த்தைகள் உதிரும்போது இருண்டு குமுறி வரும் மழை மேகத்தைப்போல் அவர்களின் முகங்கள் குழம்பித் தவிக்கின்றன. பூவாத்தாளுக்கும் குஞ்சரத்திற்கும் இடையிலே நான் மன ஒற்றுமையைக் கண்டேன். குஞ்சரத்திற்குத் தலைவலி என்ருல், பூவாத்தாள் தலை நோகும், பூவாத்தாளுக்கு ஒரு கோளாறு என்ருல் குஞ்சரம் துன்புறுவாள். ஆனல் இன்று?... என்னல் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை ஜமீன்தார். குஞ்சரத்தை நினைக்கும்போது மனம் குழைகிறது; பூவாத்தாளின் அகால முடிவை நினைக்கும்போது குழைந்த உள்ளம் கருங்கல்லாகி பலி தீர்க்க நினைக்கிறது. நீங்களே சொல்லுங்கள். அந்த சிங்கப்பெருமாள் அம்பலம் ஒரு ஆறுதல் வார்த்தையாவது சொல்லியிருந்தால் என் மனம் ஓரளவு சாந்தியடைந்திருக்கும். அவர் அதுகூடச் சொல்லவில்லையென்ருல், தொடர்ந்து அவருக்கு உழைத்துத்தான் என்ன பயன்? அதனுல்தான் அவருக்கு முன்னிலையிலேயே சவால் விட்டேன். அந்தச் சவாலை நிறைவேற்ருவிட்டால்–குஞ்சரத்தை நினைத்து நினைத்து அவரை வருந்தும்படி செய்யாவிட்டால் எனக்கு அவமானம் என்றுதான் குஞ்சரத்தை கடத்தும் காரியத்தில் தீவிரமாக முனைந்தேன். நான் எதிர்பாராத வகையில், பூவாத்தாள் செத்த அன்று எனக்கு ஒரு வாலிபனின் உதவி கிடைத்தது. கொஞ்ச நாள் வரை அவனை நான் எதுவும் விசாரித்துக்கொள்ளாமலே இருந்து விட்டேன். பிறகுதான் அவன் **பிரான்மலையைச்** சேர்ந்தவனென்றும், அவன் பெயர் **பஞ்சவர்ணம்** என்றும் தெரியவந்தது. பஞ்சவர்ணம் திடீரென்று ஏன் சூரைக்குடி வர வேண்டும், எனக்கு உதவிசெய்ய வேண்டும் என்று இன்னும் நான் யோசித்துப் பார்க்கவில்லை. அவன் கெட்டிக்காரனுகத்தான் இருக்க வேண்டும். ஒருவருக்கு நல்ல காரியத்தைச் செய்யும்போது செய்கின்றவருக்கும், செய்யப்படுகிறவருக்குமிடையிலே எந்தவித சந்தேகங்களும் எழும்புவதற்கு வழி வைக்கக்கூடாது என்றும், ஒருவரை எதிர்க்கும்போது, அழிக்க நினைக்கும் போது முதலில் எதிரியை குழப்பப் பழகிக்கொள்ள வேண்டுமென்றும் எத்தனையோ முறை எனக்கு அம்பலகாரர் உபதேசித்திருக்கிருர். அந்தப் பாடத்தை முதலில் அவரிடமே நான் நிரூபித்துக் காட்டினேன். எப்படி என்பீர்கள். குஞ்சரத்தை அப்புறப் படுத்தும் பணியில் வெள்ளைக்காரர்களுக்கும் பங்குண்டு என்று அம்பலகாரர் எண்ணும்படி வெள்ளைக்காரர்கள் உடைகளை என் வீட்டிலும் அம்பலகாரர் வீட்டிலும் ஆங்காங்கே பரப்பி வைத்தேன். இதுவே முதலில் அவருக்கு குழப்பத்தைத் தந்திருக்க வேண்டும். இரண்டாவது பிணம் அவரை பெருத்த சந்தேகத்தில் தள்ளியிருக்கும். சூரைக்குடியில் வெகு நாட்களாக ஒரு மலையாளி வாழ்ந்து வந்தார். அவருக்கு ஜோசியமே தொழில், அவரை வயிற்றுவலி ஜோசியர் என்றுதான் எல்லோரும் சொல்லுவது வழக்கம்.

- தொடரும் -

மலேயா வாழ் தமிழருக்கு மகிழ்ச்சி தரும் செய்தி

சென்னை மயிலாப்பூர், ராஜேஸ்வரி புத்தக நிலைய உரிமையாளர் **ராம. முத்தையா**, 27-3-58ல் 'சென்னை ராஜ்யம்' கப்பலில் புறப்பட்டு மலைநாட்டு வளங் காண வருகிருர். அன்பர்கள் அவருடன் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

ராம. முத்தையா,
36, ஜலான் கோப்பிங்
கம்பார் (பேரா)

எங்கும் கிடைக்கும்

மார்ச் திங்கள் இரண்டாவது கிழமை ஞானசம்பந்தன் கோடை விடுமுறைக்காக மாத்தூருக்குப் பயணமானான். விடுமுறையைச் சென்னையிலேயே கழிக்கலாமா என்றுகூட நினைத்தான். ஆனல் அன்னையும் அப்பாவும் அடிக்கடி வரச் சொல்லி வற்புறுத்தி எழுதியதைத் தட்டிக் கழித்தால் பணத்திற்குத் தட்டு வந்துவிட்டால் என்ன செய்வது என்று எண்ணி அந்த நினைப்பை முளையிலேயே கிள்ளி எறிந்தான்.

'அழாதே அடிக்கடி வருவேன்' என்று அமுதவல்லிக்கு ஆறுதல் கூறினன். 'அனுப்புகிறேனப்பா பணம் அனுப்புகிறேன்' என்று அருணசலத்திற்கு 'அபயம்' கூறி மாத்தூருக்குப் பயணமானன்.

இரண்டு திங்கள் அங்கே கழித்துத் தீர வேண்டுமே என்று எண்ணியபோதே அவனுக்குத் தயக்கமாக இருந்தது. ஆனல் 'அமுதவல்லி' வாழ்க்கையை எண்ணி எதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆறுதல் பெற்றன். தண்ணீரினின்றும் வெளியில் எடுத்தெறியப்பட்ட மீன்போல் மாத்தூர் வாழ்க்கையில் ஒட்டாமல் ஒதுங்கி வாழ்ந்தான் அந்த விடுமுறையில். அமுதவல்லியைக் காண வேண்டும் என்று அடிக்கடி எழுந்த ஆசையை அடக்கிட அரும்பாடுபட்டான். பணத்தை தேடித் தேடி, பட்டணத்திற்கு அனுப்பினன்.

எழிலனுடன் முன்போல்மனம் விட்டுப் பேச முடியவில்லை அவனல். எவ்வளவோ முயற்சி செய்தும் தன் மனத்தின் அடித்தளத்தின் ஆழத்தில் புதைந்திருந்த செய்தியை அவனிடம் எடுத்துச் சொல்ல இயலாமல் திண்டாடினன். வாய்வரையிலும் அந்த எண்ணம் சில நேரங்களில் வந்துவிடும். ஆனல் சொல்லாக வடிவம் பெருமல் அழிந்து போகும். பெருமூச்செறிவான். 'என்ன அந்தப் பெருமூச்சுக்குக் காரணம்?' என்று எழிலன் கேட்டால் 'ஒன்றுமில்லை' என்று எளிதாகச் சொல்லிவிடுவான்.

விடை என்னவோ எளிதாகத்தான் சொன்னன். ஆனல் மனத்தின் சுமை பாரமாக இருந்தது.

எண்ணித் துணிய வேண்டும் எதையும் என்பது மூத்தோர் முதுமொழி. ஆனல் நாம் எதையும் எண்ணித்தான் துணிகின்ருேமா எனின் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். துணிந்தபின் பல பேருக்கு எண்ணம் பிறக்கிறது. ஆனல் அந்த எண்ணம் பயன்படுவதில்லை. துணிந்தபின் எண்ணுவது 'இழுக்கு' என்பதை நாம் உணருவதே இல்லை என்று சொல்லிவிடலாம்.

மனதிலே ஆசை அரும்பினல் உடனே அதனைச் செயல்படுத்திப் பார்த்துவிட எண்ணுவது சிறு பிள்ளைகள் மணலில் வீடு கட்டி விளையாடுவதைப்போலத்தான். அந்த மணல் வீடு நிலைத்து நிற்பதும் இல்லை, நிழலும் தருவதில்லை. நினைவு, செயலாக எண்ணம் இல்லாமல் மாறினல் அதே நிலையைத்தான் அடைகின்றது.

ஞானசம்பந்தன் நினைத்தான் அமுதவல்லியின் அன்பைப்பெற வேண்டும் என்று பெற்ருல் என்ன விளையும் என்று எண்ணவில்லை. நினைத்ததும் அன்பைப் பெற்ருன். அன்பு அடிவயிற்றை வளர்த்தது. அதனல் ஞானசம்பந்தனின் அகத்தில் பெரிய போராட்டம் எழுந்தது. அந்தப் போராட்டத்தில் புயலில் சிக்கிய பூனை ஆனன் அவன்.

எப்பக்கமும் இல்லாமல் இப்பக்கமும் அப்பக்கமுமாக மாறி மாறி வீசும் புயலில் பூனை சிக்கினல் அதன் நிலை என்ன ஆவது? தாய் தந்தையரின் அன்பு, ஊரவரின் மதிப்பு பட்டம் பதவி வாழ்க்கை என்ற புயல் ஞானசம்பந்தனைச் சுற்றி வீசியது. அவன் அவற்றிற்கிடையேசிக்கிய பூனையாய் அல்லற் பட்டான்.

சிவகாமி அம்மாள் ஒருநாள் நிலாவொளியில் கணவனுக்கு வெற்றிலை மடித்துக்கொடுத்துக் கொண்டே தன் எண்ணத்தைத் தெரிவித்தாகள். பெரியசாமி பாக்கைக்குதப்பியதுபோல் அந்த அம்மாள் சொன்ன சொற்களையும் குதப்பிக்கொண்டிருந்தார்.

பாக்கும் வெற்றிலையும் சுண்ணும்பும் அளவாக வைத்து மென்றல் சுவையும் இருக்கும்; சுகமாகவும் இருக்கும. மற்ற இரண்டும் அளவு மீறினலும் கவலை இல்லை; சுண்ணும்பு கொஞ்சம் மிகுந்தால் போதும் வாய் வெந்துபோகும். அதைப்போல் சிவகாமி அம்மாள் சொன்ன செய்தியைக் குதப்பிக் கொண்டிருந்த பெரியசாமிக்கு அந்த அம்மாள் சொல்லிலே இருந்த கடுமை மிகுந்த சுண்ணும்புபோல் மனதில் சுறுக்கென்று தைத்தது.

"என்னதான் சொல்லுகின்ருய் நீ இப்போது?" என்ருர்.

"என்ன சொல்லுகின்றேன். காலாகாலத்தில் செய்யவேண்டியதைச் செய்யவேண்டும் என்கிறேன். அவ்வளவுதான்."

"இதோ வெற்றிலை போட்டுக் கொண்டுதானே இருக்கிறேன்."

"இந்தக் கேலிக்கு ஒன்றும் குறைச்சலில்லை. பையனுக்குத் திருமணம் செய்வதைப் பற்றிச் சொல்கிறேன்."

"செய்துவிட்டால் போகிறது. இதிலே என்ன இருக்கிறது. எங்காவது பெண் பார்த்திருக்கிருயா?"

"எல்லாம் என்னைக் கேளுங்கள்?"

"பார்த்திருந்தால் சொல்லேன்."

"எங்கள் பெரிய அண்ணன் மகள் வள்ளி இருக்கிருளே."

"ஆமாம் இருக்கிருள்."

"என்ன இருக்கிருள் என்று இழுக்கிறீர்கள். அவளையே முடித்துவிடலாம்."

"இதிலே நாம் முடித்துவிட என்ன இருக்கிறது. அவன் முடிக்கிருனு தாலியை என்று கேள்" என்ருர்.

"அதற்கென்ன நாளைக்கே சொல்லுகின்றேன்" என்று சிவகாமி அம்மாள் சொல்லிவிட்டு ஒருவழியாக மகன் திருமணத்தை முடித்துவிட்டோம் என்றே கருதி விட்டார்கள்.

சிவகாமி அம்மாளுக்கு நிம்மதி பிறந்தது. மாடிஅறையில் ஞானசம்பந்தன் நிம்மதியை இழந்தான். மாடி அறையில் இருந்து மனஞ்சோர்ந்திருந்த ஞானசம்பந்தன் வெளியில் வெண்ணிலவின் ஒளியில் தாயும் தந்தையும் ஏதோ திருமணம்-மாமன் மகள் என்ற சொற்களைக் கலந்து பேசுவதைக் கேட்டு மறைவாக நின்று அவ்வளவையும் கேட்டுக் கொண்டான்.

இதை ஞானசம்பந்தன் எதிர் பார்த்துக்கொண்டுதான் இருந்தான். என்ருவது ஒரு நாள் சிவகாமி அம்மாள் தன் திருமணப் பேச்சை எடுப்பார்கள் அவர்களுக்கு என்ன சொல்லுவது என்று பல நாட்கள் குழம்பியவன்தான் அவன். குழப்பத்தில் தெளிவு பிறக்கவில்லையானல் 'ஏதாவது சொல்லிக்கொள்ளலாம்' 'இப்போதென்ன அதற்கு' என்று அந்தக் கேள்வியை மனத்தினின்றும் அகற்றிவிடுவான். இத்துணை விரைவில் தன் அன்னைக்கு மாமியாராகிவிட வேண்டும் என்ற ஆசை வரும் என்று அவன் எண்ணவில்லை. 'அதற்கென்ன நாளைக்கேகேட்டு விடுகின்றேன்' என்று சொல்லியிருக்கிருாகளே நாளை கேட்டால் என்ன செய்வது என்று எண்ணினன்.

எவ்வளவோ எண்ணம்அவன் சிந்தையில் இடம் பெற்றது. ஆனலும் ஒன்றும் பயன்படுவதாகக் காணேம் எனத் தள்ளிவிட்டான். விடிவதற்கு முன்னே வானம் கருமைக் காடாகக் கிடக்கிறது. விண்ணில் மின்னிடும் மீன்களும் இல்லாமல் இருக்கும் போது மனம் காரணமில்லாத ஒரு கலக்கத்தைப் பெறுகின்றது. விடியப் போகின்றது-ஒளி கால இருக்கிறது என்பதைத் தெரிந்திருந்தும் மனத்தின் மூலையில் கருமை ஒருவகைத் தனிமையை ஊட்டுகின்றது.

குழம்பிய மனமும் இருண்ட இரவைப் போன்றதுதான். இருண்ட இரவில் இது இன்னது என்று அறிய இயலாமல் இன்னல்படுகின்ருேம். குழம்பிய மனம் செய்வதா வேண்டாமா என்ற தெளிவு இல்லாமல் அல்லற்படுகின்றது. இருண்ட இரவில் ஒளியின் கிறல் எங்காவது தெரிந்தால் ஓராயிரம் பொன் பெற்ருர்போல் நிம்மதி பெறுகின்ருேம். குழம்பிய மனத்திலும் குறிப்பாக ஏதாவது புலப்படுமானல் பெரியதொரு மகிழ்ச்சி கட்டுக்கு மீறி ஏற்படுகின்றது.

ஞானசம்பந்தனின் நெஞ்சம் அன்று இரவு அதைப்போல் குழம்பிப் போய் இருந்தது. அன்னையின் வினவுக்கு என்ன விடை சொல்வது என பலவாறு எண்ணினன். அமுதவல்லியுடன் தனக்கிருக்கும் நட்பைக் கூறிடலாமா என்றுகூட எண்ணினன். ஆனல் அந்தச் செய்தியைக் கேட்ட மறுகணமே சிவகாமி அம்மாளின் மனம் என்ன பாடுபடும் என்னென்ன சொல்லுவார்களோ என்று எண்ணினன். அதைப்பற்றி மூச்சுவிடக் கூடாது என்று முடிவு கட்டிவிட்டான். எந்த வகை முடிவுக்கும் வர இயலாதவனய் இரவு நெடு நேரத்திற்குப்பின் களைத்து உறங்கிப் போனன்.

மறுநாள் சிவகாமி அம்மாள் பருப்பையும் நெய்யையும் ஞானசம்பந்தனின் இலையில் அன்போடு இட்டு ஆசையோடு அருகில் அமர்ந்து ஆர்வத்தோடு ஏதோ கேட்பதுபோல் நெருங்கினர்கள்.

"என்ன'மா?" என்றன் ஞானசம்பந்தன்.

"ஒன்றுமில்லை. இன்னும் எவ்வளவு காலம் நீடிக்கவேண்டும்?"

"ஏன்'மா?"

"இல்லை சும்மா கேட்டேன்."

"சும்மா என்ன'மா ஏன் சொல்லேன்.

"வந்து.....வந்து.....உனக்குத் திருமணம்."

"முடிவு செய்துவிட்டீர்களா என்ன?"

"உன்னைக் கேட்காமல் செய்வோமா? இப்போது வைத்துக் கொள்ளலாமா" என்று எப்படியோ அந்த அம்மாள் கேட்டுவிட்டார்கள்.

என்ன சொல்வது என்று எண்ணிய ஞானசம்பந்தன் "தேர்வெல்லாம் முடியட்டுமே" என்றன். ஏதாவது சொல்ல வேண்டுமே என்பதற்காக இதைச் சொல்லிவைத்தான்.

இதைக் கேட்டவுடன் சிவகாமி அம்மாள் பெரிய செயல் ஒன்றை முடித்த மகிழ்ச்சி அடைந்து இதே சூட்டிலே இன்னொரு கேள்வியையும் தொடுத்தார்கள்.

தொடரும்

பாத்திரப் படைப்பு: 2

மன்ஷியின் மிருணாலவதி

கண்ணதாசன்

3

கிழக்கு வெளுத்தது. பொழுது விடிந்தது. தைலங்கணத்து மக்கள் மற்ற எந்த நாளையும் விட அன்று அதிகாலையில் எழுந்துவிட்டார்கள். முதலில் விழித்தவள் மிருணாலவதி. தியானத்தை முடித்துக்கொண்டு அவள் அரண்மனை முன்மாடத்திற்கு வந்து சேர்ந்தாள். சக்கலாதேவியும், லெட்சுமியும் அங்கு வந்திருந்தார்கள். கம்பீரமாக அமர்ந்தாள் மிருணாலவதி. ஆதிக்க உலகில் மிருணாலவதி என்ற கதிரவன் எவ்வளவு வலுவுள்ளது என்பதை முஞ்சன் அறியும் நாள் அது. ஆம்; மிருணாலவதி அப்படித்தான் நினைத்தாள். பாவிகளின் அகந்தையை அழிப்பது தர்மத்தின் வெற்றி. முஞ்சன் பாவி என்பதிலும் அவனது அகந்தையை அழித்து தர்மத்தை நிலைநாட்டும் சத்தியவதி தான் என்பதிலும் மிருணாலவதிக்கு இருந்த உறுதிப்பாடு முன்னாள் நிகழ்ச்சியில் சிறிதும் கரைந்துவிடவில்லை.

இப்போது அவள் மேலிடத்திலிருக்கிறாள். இன்னும் சிறிது நேரத்தில் முஞ்சன் கொண்டுவரப்படுவான். தோற்ற மன்னர்களைக் கூண்டிலடைத்து பல்லாயிரம் மக்கள் முன்னிலையில் காரி உமிழ்வதை தைலங்கணம் அரசியல் தர்மமாகவே கருதிற்று. எவ்வளவு வைராக்கியம் நிறைந்த மன்னனும் இந்தத் தண்டனையில் தளர்ந்துவிடுவான். தளர்கிறானோ இல்லையோ, அந்த நேரத்தில் அவனது தோற்றமும் சூழ்நிலையுமே அவனைப் பரிதாபத்திற்குறியவனாகக் காட்டிவிடும். இத்தனையையும் மீறி முகத்தில் தெம்பையும் திராணியையும் வரவழைத்துக்கொள்வது சுலபமல்ல. அன்று வரை தைலபனிடம் தோல்வியுற்று கூண்டிலடைக்கப்பட்ட மன்னர்கள் அத்தனை பேருமே தளர்ந்துபோயிருக்கிறார்கள். ஆனால்...

முஞ்சன் வந்தான். வேடிக்கை பார்ப்பவர்களின் கூட்டம் அதிகரித்தது. முஞ்சனின் கைகள் பின்னால் கட்டப்பட்டிருந்தன. அவனது அகன்ற மார்பு மேலும் அகலமாகத் தெரிந்தது. முகத்தில் அமைதி. தலை நிமிர்ந்த நிலை. விழியில் ஒளி. இதழில் நகை. சரீரத்தில் மாறுதல் இல்லை. யானைமீது பவனி வருபவன்போல் கூண்டிலே பவனிவந்தான். மக்கள் சிரித்தார்கள். கற்களை எறிந்தார்கள். சொற்களை விசினார்கள். காரி உமிழ்ந்தார்கள். எல்லாம் கணநேரம்! பிறகு அத்தனைபேரும் வாயடைத்து நின்றார்கள். இது முஞ்சனின் தோற்றம் செய்த வேலை. முஞ்சன் பாட ஆரம்பித்தான். நகைச்சுவைகளை விசினான். மக்களோடு வேடிக்கையாக விளையாடினான். நிலைமை மாறிற்று. அவனைக் கேலி செய்ய வந்த மக்கள் அவனோடு சேர்ந்து பாட ஆரம்பித்தார்கள். அடக்கும் வழி தெரியாமல் தளபதிகள் திண்டாடினார்கள். அவர்கள் வேலை மிகவும் சிக்கலாயிற்று. எந்த மக்களைத் தமுக்கடித்துக் கூட்டி வந்தார்களோ, அந்த மக்களை விரட்டவேண்டிய நிர்ப்பந்தம் வந்துவிட்டது. அரண்மனை மாடிகூட அமளிப்பட்டது. சக்கலாவும் லெட்சுமியும் கூட முஞ்சனின் பாட்டுக்குத் தாளம் போட ஆரம்பித்தார்கள். மிருணாலவதிமட்டும் அனாதைபோல நின்றாள். படைகள் கூட்டத்தைக் கலைத்தன. முஞ்சனின் கர்வத்தை அடக்கும் முயற்சியில் மிருணாலவதி தோல்வியடைந்தாள். இதுதான் அவளது வாழ்க்கையிலேயே இந்த வகையில் முதல் தோல்வி. அடக்கப்பட்ட அவளது புலன்கள் இப்போது ஆத்திரத்தால் கொதித்தன. தன்னை மீறிய ஒரு சக்தியால் அவள் ஆட்டிவைக்கப்பட்டாள். உலர்ந்த மணல்வெளியில் கடலலைகள் மோதுவதுபோல் உள்ளத்து உணர்ச்சிகள் மோதத் துவங்கின. கேலி செய்யச் சென்ற அவளே கேலிக்கு ஆளானாள். வெற்றி பெற்றது அவளா முஞ்சனா?—அவள் உள்ளத்தில் முஞ்சன் மீண்டும் உயர ஆரம்பித்தான். இது கூடாதல்லவா! அறிவைக்கொண்டு அதை அடக்கப் பார்த்தாள். அவனும் சாதாரண மனிதன்தான் என்று திருப்பித்திருப்பிச் சொல்லிக்கொண்டாள். அவன் மனிதனா? சாதாரண மனிதனா?—சந்தேகத்தோடுஒரு குரல் பக்கத்தில் ஒலித்தது.

கோடை நடுப்பகல். வெய்யில் கொளுத்திற்று. நடமாட்டம் இல்லாத பாதையின் நடுவே முஞ்சன் அடைக்கப்பட்டிருந்த கூண்டு கிடந்தது. இனிய நிலவில் சிங்காதனத்தில் அமர்ந்திருப்பது போல் கூண்டிலே முஞ்சன் அமர்ந்திருக்கிறான். தன்னுடைய அலட்சியத்தின் மூலம், கொடுமைகளுக்கு அஞ்சாத உணர்ச்சிகளின் மூலம், முகத்தில் சிறிதும் மாற்றம் காட்டாத தோற்றத்தின் மூலம், மிருணாலவதியின் திடமான வைராக்கியத்தை முஞ்சன் அலக்கழித்துக் கொண்டிருந்தான். அவளால் தாளமுடியவில்லை. தம்பியைப் பார்த்தாள். அவன், வாளும் கையுமாக முஞ்சனைவெட்டி விழ்த்தி விடத் தயாராக இருந்தான். அப்போதும் அவன் கொலை எண்ணத்தைத் தடுக்கத்தான் மிருணாலவதி விரும்பினாள். இது ஏன்? அவளுக்கே புரியவில்லை. தம்பி தைலபன் 'ஏதாவது நடந்தால் எனக்குச் சொல்லியனுப்புங்கள்' என்று கூறி விடைபெற்றுக் கொண்டான்.

★

மிருணாலின் இருதயத்தில் தேள் கொட்டினாற்போல் இருந்தது; யோசிக்கத் தொடங்கினாள். தைலபனிடம் மனதைத் திறந்து ஏன் தாராளமாகப் பேசவில்லை? இருதயம் களங்கமாகிவிட்டதா, என்ன? அவ்வளவு நேரம் நடந்துகொண்டிருந்த தர்க்க குதர்க்கங்களை எல்லாம் அவள் அவனிடம் ஏன் ஒளியாது கூறவில்லை? அவள், அவனிடம் பொய் பேசக் காரணம் என்ன?

இந்த நினைவுகளால் அவளையும் அவள் தம்பியையும் பிணைத்திருந்த அன்பு மேலும் உறுதி பெற்றது. விஷயம் இவ்வளவுதான்: முஞ்சனின் பொய் ஆடம்பரத்தால் அவள் பிரமித்துப் போய்விட்டாள்; நிராதரவான கைதியின் மானங்கெட்ட பேச்சு அவளை மயக்கிவிட்டது. ஆனால், அவள் பிரமித்தது முட்டாள்த்தனம் அல்லவா? அவளுடைய மாசற்ற உள்ளத்துக்கு அது அழகாகுமா?

யோசனை வேறு திசையில் சென்றது. இருதயத்தில் துணிச்சல் உண்டாயிற்று. எட்டிப் போய்க் கொண்டிருந்த மனத்தெளிவைப் பிடித்துக்கட்டினாள் அவள். முஞ்சனைப் பார்க்கப்போக ஆயத்தமானாள்.

அந்த மனிதனின் கொள்கைகளை அறிந்து, அவனுடைய கடமைகளைத் தெளிந்து, அவனது வாழ்க்கை வலையின் சிக்கல்களை அவிழ்க்க, அவளைப் போன்ற யோக முயற்சியில் ஈடுபட்டவர்களல்லாது வேறு யாரால் முடியும்? இந்த நல்ல காரியத்தைச் செய்யப் பின்வாங்குவது கோழைத்தனம். தைலபன், பலத்தின் பெருமையால், தன் கால்களைக் கழுவச் செய்வான். ஆனால், அவளோ, தன்னுடைய யோக சக்தியால், 'பச்சாத்தாபம்' எனும் நீர்கொண்டு, முஞ்சன், தன் கால்களைக் கழுவுமாறு செய்வாள்.

மரக்கூண்டிலுள்ள முஞ்சனை, இரகசியச் சிறைச்சாலைக்கு அழைத்துக்கொண்டு போகுமாறு, ரணமல்லனுக்கு உத்திரவிட்டாள்.

கட்டளையை நிறைவேற்றிவிட்டுத் திரும்பிய ரணமல்லனுடன், முஞ்சனைப் பார்க்கப் புறப்பட்டாள்.

கடூரத்தால் குறுகின புருவமும், புலனடக்கத்தால் அமைந்த ஒழுங்கான தீர நடையும் மிருணாலின் மனநிலையை எடுத்துக்காட்டின. ஆனால், இருதயம் முன்போல் தெளிவாக இல்லை; நம்பிக்கை திடமாக இல்லை.

பின்னால் வரும் ராணியின் பயங்கர முகமண்டலத்தைக் கண்ட தீவட்டிக்காரன் நடுங்கிவிட்டான். ரகசியச் சிறையின் காவலாளி அகாலத்தில் அவள் வருவதைக் கண்டு ஏதேதோ கற்பனை செய்து பீதியடைந்தான்.

சிறைக்கதவு திறக்கப்பட்டது. மிருணாலின் கட்டளைப்படி தீவட்டியைக் கீழே வைத்துவிட்டு வெளியே போனான் தீவ்ட்டிக்காரன். அவள் உள்ளே சென்று தீவட்டியின் ஒளியால் முழுதும் நீங்கிவிடாத சிறையின் இருளை அறிமுகம் செய்து கொண்டாள்.

கைமீது தலையை வைத்தவாறு ஒரு மூலையில் படுத்திருந்த அவந்திபதி, மெதுவாக நிமிர்ந்து பார்த்தான்; இனிய குரலில், 'வா, நான் உன்னைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன்!' என்று சொன்னான்.

'என்னையா?'

'ஆமாம், உன்னைத்தான். நீ வராமல் இருக்கமாட்டாய் என்று எனக்குத் தெரியும். சௌக்கியந்தானே?'

அன்று குரல் மிக இனிய வசீகர சக்தி படைத்திருந்தது. தீவட்டியின் மங்கிய ஒளியிலும் அவனது பேரழகு மனதைக் கொள்ளைகொள்வதாய்க் காணப்பட்டது.

மிருணால் உறுதியுடன் கவலையை ஒருவிதமாக அடக்கிக்கொண்டு, 'முஞ்சா! உனக்கு அறியும் புத்தி இல்லை; அல்லது அறிந்த விஷயத்தை ஒழுங்காகச் சொல்லும் பரிசுத்தம் இல்லை. நான் என் வேலைக்காக இங்கே வரவில்லை. பாவக்குழியில் சிக்கித் தடுமாறும் அசுத்தமான உன் ஆத்மாவை மீட்கவே வந்திருக்கிறேன்!'' என்று சொன்னாள்.

முஞ்சன் சாந்தமாக, 'மிருணாலவதி! பிறருடைய நன்மைக்காகத் தொண்டு செய்வதால் பிரயோசனம் ஒன்றுமில்லை!' என்றான்.

நிராசையுடன் தலையில் கையை வைத்துக்கொண்டு 'சுயநலத்திற்காக யாராவது தொண்டு செய்வார்களே?' என்று கேட்டாள்.

முஞ்சன் எழுந்து உட்கார்ந்துகொண்டே மெதுவாகக் கூறினான்: 'நானும்தொண்டு செய்திருக்கிறேன்; ஏழைகளைக்காப்பாற்றியிருக்கிறேன்; அவர்களுடைய துக்கத்தைப்போக்கி இருக்கிறேன். ஆனால், நான் இவ்வாறு செய்தன வெல்லாம் அவர்கள் நன்மைக்காக அல்ல; என் சுயநலத்திற்காக; இந்தத் தொண்டுகளால் என் இருதயம் திருப்தி அடைந்தது என்பதற்காக. பிறருக்கு நன்மை செய்கிறேன் என்றுஆடம்பரப்படுத்துவதும் அகங்காரத்தைத் திருப்தி பண்ணும் ஒரு வழிதான்.'

மிருணால் பேசாமல் யோசனையிலாழ்ந்தாள். அவள் முஞ்சனுக்கு உபகாரம் செய்ய வந்திருக்கிறாளா? அல்லது, தன் அகங்காரத்தை மகிழ்விக்க வந்திருக்கிறாளா? முஞ்சனின் சொற்களில் உண்மை இருப்பதாகத் தோன்றியது. ஆனாலும் தைரியமாகப் பதிலளித்தாள்:'இதுவும் உன்னுடைய வெட்கங்கெட்ட குணத்திற்கு ஓர் எடுத்துக்காட்டே!'

முஞ்சன் சிரித்தான்.

- தொடரும் -

வெண்பாப் போட்டி-14.

ஈற்றடி :

'கலைக்கும் கலையாக் கலை.

முடிவு தேதி 5-4-58.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

— 2ம் பக்கத் தொடர்ச்சி —

மேம்புல் மேய்கின்ற அரைகுறை அறிவாளிகளை 'மயிலைப் பார்த்து விட்டு ஆடும் வான்கோழிகள்' என்று வர்ணிக்கிருர்.

வரன் முறையாகப் படிக்காதவன், பெரிய புலவனுகத் தன்னை எண்ணிக்கொண்டு எவரோ சொன்ன ஒரு பாட்டை மனப்பாடம் பண்ணிச் சொல்லித் திரிவது கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானும் சிறகை விரித்தாடியதையே ஒக்கும்.

'கல்லாதான் கற்ற கவி' என்று சொல்லுகிருர் ஒளவையார். முறையாகப் புலமை அடையாதவன் தன்னை மேதை என்று நினைத்துக்கொண்டு யாரோ எழுதித் தந்த கவியை வெளியிடுவதையும் பறைசாற்றுவதையுமே ஒளவையார் கண்டிக்கிருர்.

அவலட்சணத்தின் கொடுமுடி

போலிகளின் சலசலப்பும் வான்கோழிகளின் ஆட்டமும் ஒன்று. மயிலின் தகுதி தனக்கிருக்கிறது என்று வான்கோழி தீர எண்ணிப் பார்த்திருந்தால் அது ஒருபோதும் ஆடாது.

மயிலின் தோகை எங்கே? வான்கோழியின் சிறகு எங்கே! மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு இரண்டுக்கும். ஒன்று அழகின் உச்சி! இன்னென்று அவலட்சணத்தின் கொடுமுடி!

வான்கோழிக்கு இருப்பது தோகையா? அப்படித்தான் நினைத்துக்கொள்கிறது அது! ஆனல் அதற்கிருப்பது 'பொல்லாச் சிறகு'! தோகை என்று குறிக்கவில்லை ஒளவையார். சிறகு என்றே சொன்னர். பொல்லாச் சிறகு!– பார்க்கமுடியாத சிறகு! கண்ணைப் பொத்திக்கொள்ள வேண்டும்.

மயிலின் நடையும் சாயலும் தனி வனப்பு வாய்ந்தவை. மயிலின் சாயலையே அழகு நங்கையரிடம் காண்கிருர்கள் கவிஞர்கள். தலைவியைக் கண்டு மயங்கும் தலைவன் 'மயிலோ அவள்' என்று மருளுகிருன், மயில் இவ்வாறு அழகின் திருவுருவமாகக் காட்சியளிக்கிறது.

அத்தகைய மயிலின் முன்பு வான்கோழி எம்மாத்திரம்! வான்கோழியின் நடையும் உடலும் அது பார்க்கும் பார்வைதான் எவ்வளவு கோரம்! அதன் தாடையும், கொண்டையும், சிறகும்–எல்லாமே அருவருப்பானவை.

இத்துணை அலங்கோலமான வான்கோழி தன்னை மயில் என்று நினைத்துக் கொள்வதுதான் வேடிக்கை! அப்படி நினைத்துக்கொள்வதோடு மயிலின் ஆட்டத்திற்குப் போட்டியாகத் தன் பொல்லாச் சிறகை விரித்து ஆடுகிறதே அதுதான் இன்னும் விசித்திரம்!

இந்த விசித்திரம் பறவை உலகத்தோடு நிற்காமல் மனித உலகத்திலும் நிகழ்வதுதான் இன்னும் விந்தை!

★

முற்றும் படித்தவர்கள் அமைதியாக இருப்பார்கள். அவர்கள் புலமை வெளிப்படும்போது மயிலின் ஆட்டம்போலக் கண்ணுக்கும் கருத்துக்கும் குளிர்ச்சி பயக்கும். அரைகுறையாகப் படித்தவர்களோ சலசலப்பார்கள். தங்களைப் பெரிய அறிவாளி என்று கருதிக்கொள்வார்கள். அதுமட்டுமா? தங்கள் பெருமைகளைக் காட்டிக்கொள்வதற்காக, தாங்கள் பிறர் சொல்லக் கேட்டு மனப்பாடம் செய்து வைத்திருக்கும் பாட்டுக்களை உளறிக் கொட்டுவார்கள். வான்கோழியின் ஆட்டம்போல, அவர்களின் புல்லறிவு அவர்களின் உளறலாலேயே அம்பலமாகிவிடும்.

மயிலின் நடனம் எவரையும் ஈர்க்கவல்லது; வான்கோழியின் நடனமோ எல்லோரையும் விரட்டவல்லது. குயிலின் இசை தெவிட்டாத கற்கண்டு. அது இனிக்கும். கழுதையின் தீங்குரலை அவ்வாறு ரசிக்கமுடியுமா? கழுதை குரலெடுத்தால் யாரும் ஓட்டம் பிடிக்கவே செய்வர்.

புல்லறிவாளர்கள் போலிகள், அரைகுறை அறிவாளிகள், மேம்புல் மேய்பவர்கள், பிறருடைய சரக்குகளைத் திருடித் தம் சரக்காக விளம்பரப்படுத்திக்கொள்கிறவர்கள், உள்ளீடு இல்லாத வெற்றுத் தம்பட்டங்கள் இவர்களெல்லாரும் மனித உருவில் நடமாடும் வான்கோழிகள்! முற்றுணர்ந்த அறிஞர்கள் மயில்போன்றவர்கள். மயிலுக்கும் வான்கோழிக்கும் பளிச்சென்று வேற்றுமை தெரியும்! அதுபோலவே நிறைவான படிப்புள்ளவர்களையும் அரைகுறைப் படிப்புள்ளவர்களையும் நொடியில் வேறுபடுத்திக் கண்டுகொள்ளமுடியும்.

வாயை மூடிக்கொண்டிருந்தால்

மூதுரைப் பாட்டினுள்ள நயத்தைக் கவனியுங்கள். வான்கோழி தன்னை மயிலாக நினைத்துக்கொள்வது முதல் தவறு. அதனேடு நின்றுவிட்டாலும் பொறுத்துக்கொள்ளலாம். சிறகை விரித்து நாட்டியம் ஆடத் தொடங்குகிறதே அதுதான் அது செய்கிற பெருந் தவறு. சிறகை விரித்து ஆடாவிட்டால் அதனுடைய 'அவலட்சணத்தை' நாம் அத்துணை வெளிப்படையாக எப்படித் தெரிந்துகொள்ள முடியும்? கழுதை பாடுவதாலேயே அதன் குரலின் 'கொடுமை' அம்பலமாகிறது. வாயை மூடிக்கொண்டிருந்தால் எவ்வளவு சிறப்பாக இருக்கும்!

பாடிக் கெடுத்துக்கொள்கிறது கழுதை; ஆடிக் கெடுத்துக்கொள்கிறது வான்கோழி. அதுபோல பேசிக் கெடுத்துக்கொள்கிருர்கள், கெடுகிருர்கள் கல்லாதவர்கள், அரைகுறை அறிவாளிகள். அவர்கள் வாயைத் திறவாதிருந்தால் அவர்களுடைய அரைகுறைப் புலமை பிறருக்குத் தெரியாதிருக்கும். அதன் விளைவாக அவர்களுக்கு மதிப்பும் குறையாதிருக்கும். வாயைத் திறந்து எப்போதோ தம் காதில் விழுந்த கவிதையை, அவர்கள் முற்றுணர்ந்த அறிஞர்கள்போலப் பாடுவதால் அவர்களுக்குத் தீங்கே உண்டாகிறது. அவர்களுடைய உண்மை வடிவம் புலனுகிவிடுகிறது. அவர்கள் மயில்கள் அல்லர், வான்கோழிகள் என்பது தெரிந்துவிடுகிறது. அவர்களே தங்களைக் காட்டிக்கொண்டு விடுகிருர்கள்.

மயில் ஆடுவதால் அதன் சிறப்பு மேலும் பெருகுகிறது; வான்கோழியின் ஆட்டத்தாலோ அதன் சிறுமையே தெரிகிறது.

கற்றவர்களின் சொற்களால் அவர்களின் அறிவுத் திறன் புலப்படும்; கல்லாதவர்களின் சொல்லாலோ அவர்களின் அறிவின்மையே வெளிப்படும்.

கலைத்துறையிலும் அறிவுத்துறையிலும் நடமாடும் போலிகளுக்கு— வான்கோழிகளுக்கு மூதுரைப் பாட்டு சரியான சாட்டை.

★

[மலாயா வானெலித் தமிழ்ப் பள்ளிக்கூடப் பகுதியில் 21-2-58ல் ஒலிபரப்பப்பட்டது.]

நூல் நயம்

பன்னீர் மணம்

தத்துவம் ஒரு கசப்பான மருந்து. அதை புரிந்துகொள்வது, எழுதுகிறவர்களின் ஆற்றலைப் பொறுத்தது. அதுவும் கவிதையின்மூலம் தத்துவங்களைப் பரப்பி அதனலேயே பேரும் புகழும் பெறுவது என்பது மலையைக் குடைந்து மாளிகை கட்டுவது போன்றதாகும். ஈரான் நாட்டு தத்துவக்குயில் உமர்கய்யாம்தான் சித்திர வேலைப்பாடுகளுடன் கூடிய அத்தகைய மாளிகையை எழுப்புவதில் பெரு வெற்றி பெற்ருர். அவர் வாழ்வின் அருமையைப் பற்றிப் பாடுகையில், உலகத்தையே விலை கொடுத்து வாங்கக்கூடிய குபேரனக இருந்து தத்துவங்களைக் கோருகிருர். சாவைப் பற்றிக் கூறும்போது, ஒவ்வொரு கணமும் செத்துக்கொண்டிருக்கும் மனிதனின் அனுபவப் பூர்வமான புலம்பல் வெளிப்படுகிறது. மோக்ஷமும் நரகமும் அவரது இதயத்தில் கூழாகி ஓடுகின்றன. வாழும் உலகத்தை எளிதாக்கி அதை வெல்லுவது மிகச் சுலபம் என்று பறைசாற்றி அந்த ஞானியை உலகம், மதுவருந்தியென்றும், மாதுலோலன் என்றும் இகழ்ந்துரைப்பதை இந்நூலாசிரியர் மல்லாரி எதிர்க்கிருர். ஆதாரங்கள் காட்டி வெற்றிப்பாதையைக் காண முயலுகிருர். உமர்கய்யாமின் இனிய கருத்துக்கள் சிதையாமல் சுவை கெடாமல் இங்கே பல இடங்களில் இடம்பெற்றிருக்கின்றன. இந்நூலை நாடகமாக உருவாக்காமல் தெளிவான பெருங் கட்டுரையாக எழுதியிருந்தால் ஆசிரியரின் ஆசை மக்கள் மன்றத்தில் எளிதில் பரவியிருக்கும். ஏனெனில், படித்ததை வெளியில் சொல்லவேண்டும் என்ற எண்ணமுள்ளவர்கள் கட்டுரை படிப்பவர்கள்; நாடகம், கதை படிப்போர் கடிகாரத்தைப் பார்த்துப்பொழுதைக் கழிக்க எண்ணுகிறவர்கள். ஆசிரியர் வாதத்திற்கு எடுத்துக்கொண்ட பொருள் அவசியம் கட்டுரை வடிவில் நூலாக வரவேண்டிய ஒன்ருகும்.

விலை ரூ. 1-25.

ஆசிரியர், ஆர். பி. மல்லாரி,
கிடைக்குமிடம்: தாஜ் பதிப்பகம்,
11, சுபேதார் ஹுசேன் தெரு.
சென்னை-14.

★

குறள் தந்த இல்லற இன்பம்

இது, இல்லறத்தின் சிறப்புப்பற்றி எழுதப்பட்ட நூல். புலியூர் கேசிகன் எழுதியது. எந்த நாட்டுக்காரர்களுக்குமில்லாத முறையில்வாழ்க்கைக்கே இலக்கணம் வகுத்துக் காட்டிய பெருமையைத் தமிழகத்திற்குத் தந்த 'திருக்குறள்' இந்நூலாசிரியருக்குத் தெளிவான பாதை அமைத்துக் கொடுத்திருக்கிறது. ஆசிரியர் புலியூர் கேசிகன் அவர்கள் இனிய எளிய நடையில் வாழ்க்கைக்குகந்த கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிருர். நூலில் அடங்கியிருக்கும் அத்தியாயங்களின் தலைப்புகள் நூலைத் தொடர்ந்து படிப்பதற்குப் பேருதவி புரிகின்றன.

தியாகராய நகர் கலைஞன் பதிப்பகத்தார் இந்நூலை அழகிய முறையில் வெளியிட்டிருக்கிருர்கள்.

விலை ரூபாய் இரண்டு. ஓவியர் மணியத்தின் முகப்பு உயிர்ச் சித்திரமாக அமைந்திருக்கிறது.

கிடைக்குமிடம் :
கலைஞன் பதிப்பகம்,
தியாகராயநகர், சென்னை-17

மே முதல் நாள் எங்கும் கிடைக்கும்!

முல்லை

- சிறப்பு மலர் -

பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார்
மொழித்துறை முனைவர் ஞா. தேவநேயப் பாவாணர்
டாக்டர் மு. வரதராசனர்
,, மா. இராசமாணிக்கனர்
,, அ. சிதம்பரநாதனர்
பேராசிரியர் ஒளவை. சு. துரைசாமி
சோ. பாகிரதி, எம். ஏ.
பி. பா. உமாமகேஸ்வரி, எம். ஏ.
வ. சம்பந்தன், பி. ஏ.
இரா. இளஞ்சேரன்

டி. கே. சீனிவாசன்
அகிலன்
நா. பாண்டுரங்கன், எம். ஏ.
தில்லை-வில்லாளன், எம். ஏ.
கே. ஏ. மதியழகன், பி. ஏ.
கே. ஜி. இராதாமணாளன்
தில்லை-மறைமுதல்வன், எம். ஏ.
ப. புகழேந்தி

கம்பதாசன்
சுரதா
வாணிதாசன்
முடியரசன்
கண்ணதாசன்

மற்றும் பலரின்

கட்டுரைகள், கதைகள், கவிதைகள்.

கண்ணைக் கவரும் வண்ண முகப்பு
கருத்தைக் கவரும் எழில் சித்திரங்கள்
புகைப் படங்கள்.

'முல்லை' சிறப்பு மலர்
ஒரு முத்தமிழ்ப் பெட்டகம்; இலக்கியப் பேழை!

சுமார் இருநூறு பக்கங்கள்—விலை ரூ. 1.

★

முல்லை :: சென்னை-6.

வெண்பாப் போட்டி

13. தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

குவித்த கரத்துள் கொடுவாளும், ஊதி
அவித்த அடுப்பில் அழலும்,—கவிந்தோடும்
காரிடையே மின்னும் குடியிருக்கும் ஆதலால்நீ
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—அ. லெ. சுப்பிரமணியன், புளியங்குளம்.

❁

மீனுவுக் குன்மேல் மிகவாசை உன்னினைவால்
தேனுன வள்ளியும் தேய்கின்ருள்—வீணுக
சீர்காட்டும் வாழ்வில் சிறந்ததுணே யாரென்று
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—கே. கூடலிங்கம், தேவகோட்டை.

❁

ஆட்சி மொழிதமிழாம் ஆக்கினேம் சட்டமெனல்
மாட்சிவட இந்திபெறச் சூழ்ச்சியடா—மூர்ச்சித்து
சோர்ந்தோய்ந்து சாயாதே தோழா பகுத்தறிவால்
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—சி. முத்தையா, தூத்துக்குடி.

❁

இன்பம் எதிர்பார்க்கும் ஏந்திழையே நீயேனே
துன்பஞ்சூழ் ஆசான் துணையானுய்?—இந்நிலையில்
ஆர்ந்தெழும் ஆசைகள் அத்தனையும் நீயடக்கித்
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—"பழனிராதா" கும்பகோணம்.

❁

கண்ணென்பான் முத்தென்பான் கன்னல் மொழியென்பான்
பண்ணென்பான் பால்கலந்த தேனென்பான்—பெண்ணணங்கே
சேர்ந்துன்னை இன்புறுமுன் சொல்லாளன் பண்பதனைத்
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—பொ. அண்ணுவி, வதியம்.

❁

சிந்தைச் சிலம்பும், சிறப்புச்சிந் தாமணியும்
முந்தைத் தமிழிலே மொய்த்திருக்கச்—சுந்தரியே!
நேர்மைத் திராவிடத்தில் நீசஇந்தி தோன்றுவதேன்?
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—ந. தா. அண்ணுமலை, நல்லான் பிள்ளைபெற்ருள்.

❁

எப்பொருள்தான் ஆனுலும், எவ்வகையில் கண்டாலும்,
அப்பொருளின் மூல அமைப்புணர்ந்தே—தப்பின்றி
ஓர்ந்து நினைந்தறிந்தே உண்மை ஒளிசிறந்து
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—நா. சிவராமமுத்துக்குமாரவேல், தேனி.

❁

மேன்மக்கள் பேசிடினும் மேதினியே தூற்றிடினும்
தான்கொண்ட மானமதைத் தீய்க்காதே!—வான்கிழிய
ஆர்த்தே அமைச்சர்நாம் ஆடிடினும் உண்மையினைத்
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—இரா. மணவழகன், வலங்கைமான்.

❁

"கண்களும்மைக் காணுங்கால் கூத்தாடும்; உள்ளமதோ
எண்ணி விதவையென ஏக்கமுறும்!"—"ஒண்டொடிகேள்!
சோர்ந்திடுதல் வேண்டாம்நீ! தீதகற்றி நான்மணப்பேன்!
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி."

—அரங்க நெடுமாறன், வல்லம்.

❁

சிந்தனைசெய், தீதகற்று, சீர்திருந்து, நன்மைசெய்,
சொந்தமொழி பேசு, செயலாற்று—சொந்தமாய்
கூர்மையோடு நல்லதா? கெட்டதா? என்றெதையும்
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—ப. தேவகுரு, தேவதானப்பட்டி.

❁

முத்தமிழே எங்களின் மூச்சாய் இருக்குங்கால்
சத்தற்ற இந்திதனை யெம்நாட்டில்—புத்தியின்றி
சேர்க்க முயலுமுன் செந்தமிழின் ஏற்றத்தை
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—வெண்பாவிரும்பி, புதுவை.

❁

ஓர்நாமம் ஓர்உருவம் ஒன்றுமில்லா ஒன்றிற்குப்
பேர்பலவும் ஊர்திருவும் பேதமையே!—பாரிலன்று
யாரறிவார் சாதிமதம் அஞ்ஞானம் இஃதையெல்லாம்
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—அ. வே. காசிநாதன். ஏயார்கோட்டை.

❁

அன்பான நன்மொழியால் ஆர்வங்கூர் சேல்விழியால்
என்னுள்ளங் கொள்ளைகொள் இன்மயிலே-அன்றோர்நாள்
சேர்ந்திருந்தே இன்புற்ற செய்தியினை யாரறிவார்
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—சுப்பிரமணியன், பொன்னேரி.

❁

தெற்குக் கடல்முத்தும் சேரத்து வால்மிளகும்
விற்றுத் திரும்பிடுவேன் வேற்றூரில்—பொற்கொடியே!
கார்காலம் வந்திடுவேன்! ஏன்கவலை! வாடாதே!
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—வேமா, கோவை.

❁

இந்திமொழி சீரியதோ! மூத்ததோ! ஈண்டேதான்
பைந்தமிழ்போல் தூயதோ! பாராண்டே—வந்ததோ
கூர்மதியே! வள்ளுவன் வான்மீகி ஒன்றோநீ
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—மு. கோவிந்தராசன், வாணியம்பாடி.

❁

பல்கலையில் வல்லமைகொள் பண்புவளர் செந்தமிழா!
சொல்குறிக்க எம்மொழியைக் கற்றிடுவாய்?—சொல்தமிழா!
ஊர்ந்துவரு(ம்) 'இந்தி'யா? பாய்ந்துவரு(ம்) ஆங்கிலமா?
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—சு. கந்தசாமி, நாமக்கல்.

❁

நாட்டின் நிலையை நமதுதமிழ்த் தாய்மொழியை,
வாட்டும் கொடுவரியை, வன்நெஞ்சர்—போட்டியிடச்
சேர்ந்துண்ணும் பஞ்சத்தால் செத்தவரைச் சீர்தூக்கி
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—சி. பி. சாமி, திருப்பத்தூர்.

❁

உள்ளம் உனக்காக்கி ஒல்லும் வகையெல்லாம்
வெள்ளம்போற் காதல் விளைக்கின்ற—தெள்ளமுதைச்
சேர்ந்திருக்கும் பேறொழித்துச் செல்கின்ருய் செல்வமே
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—திருமணி, சென்னை.

❁

மாடாய்ப் பணியாற்றி மண்கல் பதர்பெற்று
கூடான பாட்டாளிக் கண்ணேகண்—மூடாதே
ஏர்பூட்டித் தேய்ந்தாயே என்னபயன் கண்டாய்நீ
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—அப்துல்கனி, கடையநல்லூர்.

❁

கண்டதுமே என்மீது காதல்நீ கொண்டுவிட்டாய்
பெண்ணழகே பேசும் திருவுருவே—உண்மையோ
கார்ஓட்டும் என்னையும் காதலித்தல் கூடுமோ
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி.

—ஜி. எஸ். சுந்தரேசன், வீரபாண்டியபுரம்.

"தென்றல்"

(உள் நாடு)

ஆண்டுச் சந்தா	ரூ. 7-50
ஆறு மாதம்	ரூ. 3-75

(வெளி நாடு)

ஆண்டுச் சந்தா	ரூ. 10-50
ஆறு மாதம்	ரூ. 5-25

ராஜாபார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்.
திண்டுக்கல்ரோடு, மதுரை

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு